# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 113/ந/2019**

**நாள் : 20/02/2020**

**திரு K. சந்தனதுரை,**
**பழநி – 624 607.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**பழநி நகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாவட்டம், பழநி, ஆவணி மூலவீதி, கருப்பண்ணத் தேவர் சந்து, 40–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. சந்தனதுரை அவர்களின் 15.07.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நீடுவத்தில் பெறப்பட்டு 113/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், பழநி, ஆவணி மூலவீதி, கருப்பண்ணத் தேவர் சந்து, 40–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. சந்தனதுரை என்பவர் தனது தந்தையார் காலம் சென்ற திரு R. கருப்பணன் என்ற கருப்பையா பெயரில் பழநி நகராட்சி கருப்பண்ணன் தெருவில் 39 மற்றும் 40–கதவு எண்களிட்ட குடியிருப்புக் கட்டடம் மற்றும் காந்தி சாலையில், 238 கதவு எண்ணிட்ட வணிகப்பயன்பாடு கட்டடத்திற்கும் உரிய அறிவிப்பு வழங்காமல் சொத்துவரி உயர்வு செய்தது முறையற்றது என்றும், தனது தந்தையார் காலமாகிவிட்டதால் அவர் பெயரில் சொத்து வரி தாக்கலாகியுள்ள கட்டடங்களுக்கான சொத்துவரியினை தன்பெயரிலும் தன் தாயார் பெயரிலும் கூட்டாக மாற்றம் செய்து தர ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் பெறப்பட்டன. முறையீட்டு மனுதாரரின் தந்தையார் பெயரில் உள்ள புதிய வரி விதிப்பு எண்கள் 080/018/00144, 080/018/00145 மற்றும் 080/023/00188 உள்ள சொத்துவரி விதிப்பு கட்டடங்களுக்கு அரசு ஆணை எண்.72/2018 மற்றும் 76/2018–ன் படி வரி சீராய்வு செய்யப்பட்டது என்றும், தற்பொழுது, 19.11.2019 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.150–இன் படி பழைய வரியையே செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். இதற்கான சொத்துவரி கேட்பு அறிவிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஆணையர் தனது 05.08.2019 நாளிட்ட அறிக்கையிலல் சொத்துவரி பெயர்மாற்றம் செய்வதற்கான

மனுவினை ஆவணங்களுடன் நகராட்சி அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி தாக்கல் செய்யும் நிலையில் பெயர் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள இயலும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து பழநி நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையரிடம் 07.02.2020 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சொத்துவரி பொது சீராய்வு செய்யப்பட்ட சொத்துவரி விதிப்புகளுக்கு 31.03.2018—க்கு முன்பிருந்த சொத்துவரியினை தொடர அரசு ஆணையிடப்பட்டுள்ள நிலையில் மனுதாரரின் தந்தை பெயரில் உள்ள சொத்துவரி விதிப்புகளுக்கும் வரி குறைப்பு செய்யப்பட்டு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்து முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு நகல்களை விசாரணையின் போது தாக்கல் செய்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரும் தனது 05.12.2019 நாளிட்ட கடிதத்தில் சொத்துவரி விதிப்பு குறித்து நகராட்சி திருத்திய வரிவிதிப்பு அறிவிப்பு வழங்கிய விவரத்தினை உறுதி செய்துள்ளார். மேலும், சொத்துவரி பெயர் மாற்றத்திற்கும் உரிய ஆவணங்களுடன் உரிய கட்டணம் செலுத்தி நகராட்சிக்கு விண்ணப்பிக்கும் நிலையில், உரிய விதிகளின் கீழ் பெயர் மாற்றம் செய்திடவும் ஆணையிடப்படுகிறது.

**2020—ஆம்** ஆண்டு பிப்ரவரி திங்கள், 20—ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. **திரு K. சந்தனதுரை,**
   **40, கருப்பணத் தேவர் சந்து,**
   **ஆவணி மூலவீதி,**
   **பழநி — 624 607.**
   **திண்டுக்கல் மாவட்டம்**

2. **நகராட்சி ஆணையர்,**
   **பழநி நகராட்சி,**
   **பழநி, திண்டுக்கல் மாவட்டம்.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு — 3**
**இ.கோ. / உதிரி**